**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 175/2021</u>**

நாள் 04.03.2025

PW1 – சண்முகசுந்தரம்

த/பெ – பொன்னுசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2025.)**

**<u>2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 1–ம் பிரதிவாதி நடராஜ் எனக்கு சுமார் 25 வருடமாக எனக்கு பழக்கம். அவருடைய மகன் தான் 2–ம் பிரதிவாதி சக்திவேல். அவரை நான் நேரில் பார்த்துள்ளேன். 2–ம் பிரதிவாதியை எனக்கு அவர் சிறுவயதாக இருந்த காலம் முதலே எனக்கு பழக்கம். எனக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் இடையே நேரடி கடன் வரவு செலவு எதுவும் இல்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி கூலி வேலை செய்து வருகிறார். 1–ம் பிரதிவாதி என்னிடம் ரூ.5,00,000/–ஐ 27.10.2018–ம் தேதியில் கடனாக வாங்கினார் என்றால் சரிதான். அந்த கடனுக்கு ரூ.100/–க்கு ரூ.1/– வட்டி பேசப்பட்டது. அந்த கடனுக்கு ஆதரவாக 1–ம் பிரதிவாதி புரோநோட் எழுதிக்கொடுத்தார். அந்த புரோநோட்டை வேறு எந்த ஆவணமும் மேற்படி கடனுக்காக 1–ம் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் புரோநோட்டின் பேரில் தான் ரூ.5,00,000/–ஐ கடனாக கொடுத்தேன். 1–ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டில் வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த கருப்பசாமி மகன் செல்வராஜ் சாட்சி கையெழுத்து போட்டார். அந்த புரோநோட்டை ராயன்கோவில் அருகில் உள்ள கவின்ராஜ் என்பவர் எழுதினார். 1–ம் பிரதிவாதி பல நபர்களிடம் கடன் வாங்கியுள்ளார். அவர் யார் யாரிடம் கடன் பெற்றுள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது.

தற்போது கடந்த 4 வருட காலமாக நான் 1–ம் பிரதிவாதியுடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொள்வதில்லை.

2. நான் இந்த வழக்கு போட்டுள்ள விபரம் 1–ம் பிரதிவாதிக்கு தெரியுமா? என்றால் அது எனக்குத் தெரியாது, நான் அவருக்கு சொல்லவில்லை. 1–ம் பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் தொகைக்கு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. 1–ம் பிரதிவாதி மீது கடன் தொகையை வசூலிக்க கேட்டு எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், அது எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். அதேபோல் அந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 2018–ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த அசல் வழக்கு எண் எனக்குத் தெரியாது. அந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 1–ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பிற்கு 1–ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்று எனக்குத் தெரியாது. அந்த சட்ட அறிவிப்பை 1–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து வழக்கு தொடரப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் 1–ம் பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்ய கேட்டு மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் சரிதான். அது என்ன காரணத்திற்காக வேண்டி தள்ளுபடி செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் 2–ம் பிரதிவாதி சக்திவேல் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அவருடைய சொத்தை அவரது மகனான 2–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த விபரம் 2018–ம் ஆண்டிலேயே எனக்குத் தெரியும். இந்த வழக்கில் கண்ட சொத்தானது 1–ம் பிரதிவாதி நடராஜ் கிரையம் வாங்கிய சொத்து. அந்த சொத்தை 1–ம் பிரதிவாதி எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்று எனக்குத் தெரியாது. 1–ம் பிரதிவாதி 2–ம் பிரதிவாதிக்கு எந்த தேதியில்

கிரையம் கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. அதில் எவ்வளவு தொகை கிரைய மறுபயனாக 1—ம் பிரதிவாதி, 2—ம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டார் என்று எனக்குத் தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் 1—ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான பிரதாப் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.2—ல் கண்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் 2—ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார். தாவா செதத்திற்கு உண்டான பஞ்சாயத்து வரி விதிப்புகளை 2—ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்குத் தெரியாது. 2—ம் பிரதிவாதி அவரது அப்பா 1—ம் பிரதிவாதி மீது அவ.எண்.178/2020 என்ற வழக்கை நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகின்ற விபரம் தெரியுமா என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் 1—ம் பிரதிவாதி வழக்கறிஞரை நியமித்து எதிர்வழக்காடி வருகிறார் என்றால் அது எனக்குத் தெரியாது. 1—ம் பிரதிவாதிக்கும், 2—ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள மனஸ்தாபம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் அது எனக்குத் தெரியாது. 1—ம் பிரதிவாதி, 2—ம் பிரதிவாதி மீது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்து தர்ணா செய்த விபரம் பத்திரிக்கையில் வந்தது என்றால் அது எனக்குத் தெரியாது. 2—ம் பிரதிவாதிக்கு இந்த வழக்கில் அவருக்கு சம்மன் வந்த வரையில் என்னை யார் என்று அவருக்கு தெரியாது என்றால் சரியல்ல, கடன் வாங்கும் போது 3 நபர்களும் சேர்ந்து வந்து தான் கடன் வாங்கினார்கள். 1—ம் பிரதிவாதி எனக்கு நண்பர் என்ற முறையில் தாவா சொத்தை 2—ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் போலியாக புரோநோட்டை தயார் செய்து நான் 1—ம் பிரதிவாதிக்கு எதிராக

மட்டும் வழக்கை தாக்கல் செய்து 2-ம் பிரதிவாதிக்கு தெரியாமல் டிகிரி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி அவருடைய சொத்தை அவரது மகனான 2-ம் பிரதிவாதிக்கு 27.11.2018-ம் தேதியில் கிரையம் செய்து கொடுத்ததால் அதற்கு முன் தேதியிட்டு 27.10.2018-ம் தேதியிட்டு 1-ம் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியது போல புரோநோட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நன்கு தெரியும் என்றும் அ.வ.எண்.178/2020 வழக்கில் வழக்கறிஞர் நியமித்து 2-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்காடி வருகிறார் என்றும், எனக்கு ஆதரவாக இருக்க வேண்டி தான் இந்த வழக்கில் ஒருதலை பட்சமாக ஆஜராகாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 2018-ல் தாக்கல் செய்ததாக சொல்லப்படும் புரோநோட் வழக்கிலும் எனக்கு ஆதரவாக 1-ம் பிரதிவாதி ஒருதலை பட்சமாக ஆஜராகாமல் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்திற்கு உண்டான கிரைய தொகையை கொடுத்து தான் 2-ம் பிரதிவாதி அவரது பெயரில் கிரையம் பெற்றார் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. அதனால், மேற்படி 27.11.2018-ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை செல்லாது என்று அறிவிக்க கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா கடன் தொகையான ரூ.5,00,000/-ஐ கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு தகுதியும் இல்லை, வசதி வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. அந்த கடன் தொகையை வாங்குவதற்கு 1-ம் பிரதிவாதிக்கு அவசியமே இல்லை என்றாலும் சரியல்ல. 2-ம் பிரதிவாதி, 1-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அதில் 2-ம் பிரதிவாதிக்கு பின்னடைவு ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் நானும், 1-ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்

என்றால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.03.04 13:59:27 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**